### அருளப்பர் முதல் நிருபம் 4:15

சேசுநாதர் தேவசுதனென்று எவனெவன் அறிக்கையிடுகிறானோ, அவனிடத்தில் சர்வேசுரன் நிலைத்திருக்கிறார். அவனும் சர்வேசுரனிடத்தில் நிலைத்திருக்கிறான்.

### எபிரேயருக்கு எழுதிய நிருபம் 10:23

நம்முடைய நம்பிக்கையை வெளிப்படுத்துவதில் தத்தளியாமல் நிலைநிற்போமாக; (ஏனெனில் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்)

### பிலிப்பியர் 2:11

ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் பிதாவாகிய சர்வேசுரனுடைய மகிமையில் வீற்றிருக்கிறாரென்று எல்லா நாவும் அறிக்கையிடவும் பண்ணினார்.

### உரோமாபுரியார் 1 10:10

எவ்வாறெனில், நீதியை அடைய இருதயத்தால் விசுவசிக்கிறோம். இரட்சணியமடைய வாயால் அறிக்கையிடுகிறோம்.

### உரோமாபுரியார் 1 14:11

ஏனெனில், சிரஞ்சீவியர் நாமே, எல்லா முழங்கால்களும் நமக்கு முன்பாக முடங்கும், எல்லா நாவும் சர்வேசுரனை ஸ்துதிக்கும் என்று ஆண்டவர் சொல்லுகிறாரென்று எழுதியிருக்கிறது. (இசை. 45:24; பிலிப். 2:10.)

### சங்கீதங்கள் 24:10

ஆண்டவருடைய ஏற்பாட் டையும், அவருடைய முறைமைகளை யுங் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவருடைய பாதைகளெல்லாங் கிருபையுஞ் சத்தியமுமாயிருக்கும்.

### எரேமியாஸ் புலம்பல் ஆகமம் 3:24

ஹேத்: எனது ஆத்மா: கர்த்தர் என் பங்கு என்றது; ஆதலால் அவரை நம்பியிருக்கிறேன்.

உரோமாபுரியார் 1 10:9

எப்படியெனில், ஆண்டவரா கிய சேசுநாதரை உன் வாயினால் அறிக்கையிட்டு, சர்வேசுரன் அவரை மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்தார் என்று உன் இருதயத்தில் விசுவசிப்பாயாகில் இரட்சிக்கப்படுவாய்.

சங்கீதங்கள் 32:5

அவர் இரக்கத்திலும் நீதியிலும் பிரியப்படுகிறார்; ஆண்டவருடைய இரக்கத்தால் பூமி நிரம்பியிருக் கின்றது.

தீமோத்தேயு 1 6:12

விசுவாசத்தின் நல்ல போர் பொருதுவீராக; நித்திய ஷஜீவியத்தைக் கைப்பற்றிக்கொள்ளும். இதற்காக வே நீர் அழைக்கப்பட்டீர். இதைப் பற்றியே அநேக சாட்சிகளுக்கு முன் பாக விசுவாசத்தின் நல்லறிக்கையிட் டிருக்கிறீர்.